முருகப்பெருமான் துணை

**மகான் அப்பூதி அடிகளார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

08.04.2021, வியாழக்கிழமை

1. தவசியே கலியுக ஞானியே
தரணி காத்திட வந்தநல்
அவதார ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமைகூறி
2. கூறியே யோக பிரசன்னஆசி
குறையிலா சார்வரி சேல்திங்கள்
இருபானாற் திகதி வேந்தன்வாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 26ம் நாள், 08.04.2021 வியாழக்கிழமை)
இயம்பிடுவேன் அப்பூதி அடிகளார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தீட்சை சக்தி அருளும்
ஞான தேசிகன் ஞான வழிகளை
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே வையகம் எங்கிலும்
வல்லமையான மக்கள் பலம் உருவாகி
பெருமைபட உலகம் மாற்றம் பெறும்
புண்ணிய தரும வழிகள் சிறக்க
5. சிறக்கவே அன்னதான சேவை
செகமெங்கிலும் பரவிடும்படி செய்து
மறுக்கா உலகமக்கள் ஏற்றுவர
மனமுவந்து தருமம் செய்துவர
6. வருகவே இணையிலா ஆற்றலாக
வள்ளல் தன்மை பெருகி நின்று
முருகப் பெருமான் அருளும் தயவும்
முழுமையான மாற்றமும் வந்தடையும்
7. அடையவே அனுதினமும் மக்கள்
ஆறுமுகனார் சோதி ஏற்றி
தடையற சடாட்சர செபதபம்காண
தவபலமாக ஆற்றல் பெறுவர்
8. பெருமைதரும் ஞானி அரங்கன்
பிரணவக் குடிலை கலியின்
வறுமை துன்பம் போக்கும்
வல்லமையான ஞானக் குடில்
9. குடிலின் சக்திநிலை அரங்கன்
குறைவிலா தருமத்தால் பெருகிவர
நாடியே மக்கள் வருகையும்
ஞாலமதில் பெருகப் பெருகவே

10. பெருகவே வருமுலகில் ஞானஆட்சி
பெருமளவில் ஞானவான்கள் உருவாகி
முருகப் பெருமான் அருள் ஆசியால்
முழுமையான மாற்றம் உண்டாகும்

11. ஆகவே கலிவாழ் மக்களே
அரங்கமகானை நோக்கி வாரீர்
வகைபட வெற்றிநிலை கண்டு
வையகத்தை ஞானபல மாக்குவீர்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–